**முதல் கூடுதல் சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.**

2025ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 06–ம் தேதி பிரதிவாதி தரப்பு சாட்சி பி.வா.சா.1–ன் வாக்குமூலம் 1989ம்ஆண்டு 19வது விதி ஏற்பாட்டின்படி ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

(வாதி ஆஜர் . 2ம் பிரதிவாதி ஆஜர். 3 முதல் 9, 14, 16 முதல் 20 பிரதிவாதிகள் ஆஜர் இல்லை. வாதி மற்றும் 2, 3, 4, 7, 20 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர் மற்றும் 2, 5, 6, 7, 8, 9, 14, 16, 17 முதல் 19 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர் இல்லை)

அ.வ.எண்.932/2015

பி.வா.சா.1 சிவசண்முகம்

<u>**வாதி தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி**</u>

1. தாவா 1வது அயிட்ட சொத்தில் 13வது இணையான சர்வே எண்.121/4, 5ல் உள்ள 1.90 ஏக்கர் பாகத்தில் 1.25 ஏக்கர் பாகம் 12ம் பிரதிவாதி பெயரில் கிரய ஆவணம் ஏற்படுத்திக்கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.11 ஆவணமான கிரய ஆவணத்தின் சான்று நகல் என்றால் சரிதான்.

2. தாவா 1வது அயிட்ட சொத்தில் 4வது இணையான சர்வே எண்.269/3ல் உள்ள 35 செண்ட் பாகத்தை பொறுத்து வா.சா.ஆ.11 ஆவணத்தின்படி 12ம் பிரதிவாதியின் பெயரில் எழுதிக்கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த சொத்தை 12ம் பிரதிவாதி 17 முதல் 19ம் பிரதிவாதி பெயரில் கிரய ஆவணம் ஏற்படுத்திக்கொடுத்துள்ளார் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது.

3. 2வது அயிட்ட சொத்து 21 செண்ட் விஸ்தீரணம் கொண்டது என்றால் சரிதான். அதில் ரைஸ் மில் அமைந்துள்ளது. ரைஸ்மில் 1வது பிரதிவாதி கட்டியதற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் லைசென்ஸ் மற்றும் மின்சார கட்டண ரசீது தாக்கல் செய்துள்ளேன். ரைஸ்மில் கட்டிமுடித்ததற்கு ஆவணங்கள் எதுவும் இல்லை.

4. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.13 ஆவணத்தில் செங்கோட்டையன் பெயரில் ஒரு கிரய உடன்படிக்கை செய்து கொடுத்துள்ளார் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. பின்னிட்டு அது ரத்து செய்யப்பட்ட விவரமும் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.13 ஆவணத்தில் உள்ள சொத்துக்கள் பூர்வீக சொத்துக்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளதால் தான் வா.சா.ஆ.13 ஆவணத்தை தெரியாது மறுக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

5. 3வது அயிட்ட சொத்து மொடவாண்டி சத்தியமங்கலம் கிராமம் ரீ.ச.எண்.256/2,3ல் உள்ள 1.50 ஏக்கர் என்று சொன்னால் சரிதான். 3வது அயிட்ட சொத்தினைப் பொறுத்து நான் எனது தகப்பனார் மற்றும் 3, 4 பிரதிவாதிகள் சேர்ந்து 6, 7 பிரதிவாதிகள் பெயரில் ஒரு கிரய ஆவணம் ஏற்படுத்திக்கொடுத்துள்ளோம் என்று சொன்னால் சரிதான். 6, 7 பிரதிவாதிகள் பெயரில் எழுதிக்கொடுத்த கிரய ஆவணம் தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.6 என்றால் சரிதான்.

6. வா.சா.ஆ.6 ஆவணத்தில் வாதிக்கும், 5ம் பிரதிவாதிக்கும் நான் பாதுகாவலராக இருந்து கண்டு எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.6 ஆவணத்தில் கண்டுள்ள சொத்துக்களில் வாதிக்கும், 5ம் பிரதிவாதிக்கும் பங்கு பாத்தியம் உள்ளதால் தான் அவர்களும் ஒருதரப்பினராக காட்டப்பட்டுள்ளார்கள் என்றால் சரிதான். மேலும் அதில் இளவரின் வைப்பீடு தொகைகள் எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். இளவரின் சொத்துக்களை விற்பதற்கு நீதிமன்றம் மூலம் எந்த அனுமதியும் பெறவில்லை என்றால் சரிதான்.

**வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**